***கல்வித் தொடர்***

இளைஞர்களுக்கான 12 + தடுப்பூசி

---

கோவிட்-19 தொற்றுக்கள் அதிகரித்து வருவதால், புதிதாக கிடைக்கக்கூடிய தடுப்பூசி விநியோகம் தொடர்பான கேள்விகளும் அதிகரித்து வருகின்றன.

CASSA வின் Covid-19 தடுப்பூசி தொடர்பான கல்வித் தொடர் அந்தக் கேள்விகளுக்குப் பதிலளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இளைஞர்களுக்கு ஏன் தடுப்பூசி போடவேண்டும்?

இளைஞர்: COVID-19 இலிருந்து எனது குடும்பத்தை பாதுகாக்க நான் என்ன செய்ய வேண்டும்?
விவரிப்பாளர்: அனைத்து உறுப்பினர்களும் தடுப்பூசி போடாத வரை, கோவிட் அச்சுறுத்தல் இன்னும் உள்ளது. பல தலைமுறை குடும்பங்கள் மிகவும் பாதிக்கப்படக்கூடியவை மற்றும் குழந்தைகள் தடுப்பூசி பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாக உள்ளது.

இளைஞர்: எனக்கு கோவிட் இருந்தது, உண்மையில் நான் எதையும் உணரவில்லை. இதன் பின்னும் நான் கோவிட் ஐ பெற்றுக்கொள்வேனா?
விவரிப்பவர்: முந்தைய நோய் தொற்று சில பாதுகாப்பை வழங்க முடியும் என்றாலும், புதிய திரிபடைந்த வகைகளுக்கு எதிராக பாதுகாக்க தடுப்பூசி அவசியம்.

இதைக் கருத்தில் கொண்டு, எமது நகர நிர்வாகம் 12 பிளஸ் திட்டத்தை அமைத்துள்ளது. எம்ஆர்என்ஏ தடுப்பூசியின் கிட்டத்தட்ட 3 மில்லியன் டோஸ்கள் அமெரிக்காவில் இளைஞர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன, மேலும் தீவிரமான பக்க விளைவுகள் எதுவும் கண்டறியப்படவில்லை.
சந்திப்புக்கு உங்கள் குழந்தையின் சுகாதார அட்டையைக் கொண்டு வாருங்கள். உங்கள் பிள்ளைக்கு சுகாதார அட்டை இல்லையென்றால், தயவுசெய்து தொலைபேசி மூலம் முன்பதிவு செய்யுங்கள்

அல்லது கோவிட் ஹாட்லயினில் தகவல்களை அறிந்து கொள்ள 1-833-750-0888 என்ற எண்ணுக்கு குறுஞ்செய்தி ஒன்றை அனுப்புங்கள்.

இளைஞர்: எனது நண்பர்களுக்கு எப்படி உதவுவது மற்றும் அவர்களின் குடும்பங்களை எப்படி பாதுகாப்பது என்பது பற்றி நான் தெரியப்படுத்த வேண்டும். இந்த ஆண்டு கடினமாக இருந்தது, நான் என் பங்கை செய்தால் மட்டுமே இயல்பு நிலைக்கு திரும்ப முடியும்.

கோவிட்-19 தடுப்பூசி பற்றி மேலும் தெரிந்து கொள்ள வேண்டுமா?
மேலும் அறிய cassa.on.ca /vaccine என்ற இணையதள முகவரியை பார்வையிடுங்கள்

தகவல்கள் - ஒண்டாரியோ பொது சுகாதாரம்